LORDS TODAY - International Social Media & Magazine


LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | July 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS





LORDS CLUBS INTERNATIONAL


# LORDS TODAY



BHAGAVAD GITA



BIBLE



KURAN

2021- 16796675757


www.lordsclubs.com




# தலையங்கம்...

## உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்


### தொடர் 6




**BHAGAVAD GITA-Tamil**
**6 Page's**
தொடரும்.....




**BIBLE Tamil**
**6 Page's**
தொடரும்.....




**KURAN Tamil**
**6 Page's**
தொடரும்.....


LORDS CLUBS INTERNATIONAL

உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம். அன்புடன் உங்கள்,

லார்ட்ஸ் மபால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

# மெகா தொடர் PART - 6






वेदाऽविनाशिनं नित्यं य एनमजमव्ययम् ।
कथं स पुरुषः पार्थ कं घातयति हन्ति कम् ॥


இப் பொருள் அழிவற்றது, பிறப்பற்றது,
என்று முளது—இங்ஙன முணர்வான் கொல்வ
தெவனை? அவன் கொல்விப்ப தெவனை? 21

वासांसि जीर्णानि यथा विहाय
नवानि गृह्णाति नरोऽपराणि ।
तथा शरीराणि विहाय जीर्णा-
न्यन्यानि संयाति नवानि देही ॥ २२ ॥

நைந்த துணிகளைக் கழற்றி யெறிந்து விட்டு,
மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறு போல,
ஆத்மா நைந்த உடல்களைக் களைந்து புதியன
வற்றை எய்துகிறான். 22

नैनं छिन्दन्ति शस्त्राणि नैनं दहति पावकः ।
न चैनं क्लेदयन्त्यापो न शोषयति मारुतः ॥ २३॥

இவனை ஆயுதங்கள் வெட்ட மாட்டா; தீ
எரிக்காது, நீர் இவனை நனைக்காது. காற்
றுலர்த்தாது. 23






**अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च ।**
**नित्यः सर्वगतः स्थाणुरचलोऽयं सनातनः ॥**


பிளத்தற் கரியவன்; எரித்தற்கும், நனைத்தற்கும், உலர்த்துதற்கும் அரியவன், நித்யன்; எங்கும் நிறைந்தவன், உறுதி யுடையான், அசையாதான். என்று மிருப்பான். 24

**अव्यक्तोऽयमचिन्त्योऽयमविकार्योऽयमुच्यते ।**
**तस्मादेवं विदित्वैनं नानुशोचितुमर्हसि ॥ २५ ॥**

தெளிதற் கரியான் சிந்தனைக் கரியான்
மாறுத லில்லாதா னென்ப!
ஆதலால் இவனை இங்ஙனம் அறிந்து நீ
துயர்ப் படா திருக்கக் கடவாய். 25

**अथ चैनं नित्यजातं नित्यं वा मन्यसे मृतम् ।**
**तथापि त्वं महाबाहो नैनं शोचितुमर्हसि ॥ २६॥**

அன்றி, நீ இவனை நித்தமும் பிறந்து நித்தமும் மடிவானென்று கருதினால், அப்போதும், பெருந்தோளுடையாய், நீ இவன் பொருட்டுத் துயருறல் தகாது. 26







जातस्य हि ध्रुवो मृत्यु-
र्ध्रुवं जन्म मृतस्य च ।
तस्मादपरिहार्येऽर्थे
न त्वं शोचितुमर्हसि ॥ २७ ॥

பிறந்தவன் சாவ துறுதி யெனில், செத்தவன் பிறப்ப துறுதி யெனில், இந்த விலக்கொணாச் செய்திக்கு நீ அழுங்குதல் தகுதி யன்று. 27

अव्यक्तादीनि भूतानि
व्यक्तमध्यानि भारत ।
अव्यक्तनिधनान्येव
तत्र का परिदेवना ॥ २८ ॥

பாரதா, உயிர்களின் ஆரம்பம் தெளிவில்லை; இடை நிலைமை தெளிவுடையது; இவற்றின் இறுதியும் தெளிவில்லை. இதில் துயர்ப் படுவதென்னே? 28







आश्चर्यवत्पश्यति कश्चिदेन-
माश्चर्यवद्वदति तथैव चान्यः ।
आश्चर्यवच्चैनमन्यः शृणोति
श्रुत्वाऽप्येनं वेद न चैव कश्चित् ॥ २९ ॥

இந்த ஆத்மாவை

வியப்பென ஒருவன் காண்கிறான்,
வியப்பென ஒருவன் சொல்லுகிறான்,
வியப்பென ஒருவன் கேட்கிறான்,
கேட்கினும், இதனை அறிவான் எவனுமிலன்.
29

देही नित्यमवध्योऽयं देहे सर्वस्य भारत ।
तस्मात्सर्वाणि भूतानि न त्वं शोचितुमर्हसि ॥

பாரதா, எல்லாருடம்பிலுமுள்ள இந்த ஆத்மா கொல்ல முடியாதவன், ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டா. 30






स्वधर्ममपि चावेक्ष्य न विकम्पितुमर्हसि ।
धर्म्याद्धि युद्धाच्छ्रेयोऽन्यत्क्षत्रियस्य न विद्यते ॥


ஸ்வதர்மத்தைக் கருதியும் நீ நடுங்குதல் இசை
யாது. அறப் போரைக் காட்டிலும் உயர்ந்த
தொரு நன்மை மன்னர்க்கில்லை. 31

यदृच्छया चोपपन्नं स्वर्गद्वारमपावृतम् ।
सुखिनः क्षत्रियाः पार्थ लभन्ते युद्धमीदृशम् ॥

தானே வந்தெய்துவது, திறந்து கிடக்
கும் பொன்னுலக வாயில் போன்றது, இத்
தகைய போர் கிடைக்கப் பெறும் மன்னர்
இன்ப முடையார். 32

अथ चेत्त्वमिमं धर्म्यं सङ्ग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ॥

அன்றி நீ இந்த தர்ம யுத்தத்தை நடத்தாமல்
விடுவாயானால், அதனால் ஸ்வதர்மத்தையும்
கீர்த்தியையும் கொன்று பாவத்தை யடை
வாய். 33






अकीर्तिं चापि भूतानि कथयिष्यन्ति तेऽव्ययाम्
सम्भावितस्य चाकीर्तिर्मरणादतिरिच्यते ॥ ३४ ॥

உலகத்தார் உனக்கு மாறாத வசையு முரைப்பார்கள். புகழ் கொண்டோன் பின்ன ரெய்தும் அபகீர்த்தி மரணத்திலுங் கொடிதன்றோ? 34

भयाद्रणादुपरतं मंस्यन्ते त्वां महारथाः ।
येषां च त्वं बहुमतो भूत्वा यास्यसि लाघवम् ॥

நீ அச்சத்தால் போரை விட்டு விலகியதாக மஹாரதர் கருதுவார்கள். அவர்களுடைய நன்கு மதிப்பைப் பெற்ற நீ இதனால் சிறுமை யடைவாய். 35

अवाच्यवादांश्च बहून्वदिष्यन्ति तवाहिताः ।
निन्दन्तस्तव सामर्थ्यं ततो दुःखतरं नु किम् ॥

உனக்கு வேண்டாதார் சொல்லத் தகாத வார்த்தைகள் பல சொல்லுவார்கள். உன் திறமையைப் பழிப்பார்கள். இதைக்காட்டிலும் அதிகமான துன்பமேது? 36

தொடரும்.....

# BIBLE

## மெகா தொடர்
## PART - 6




## தொடக்கநூல் அதிகாரம் – 12 – திருவிவிலியம்

### ஆபிராமின் அழைப்பு

1 ஆண்டவர் ஆபிராமை நோக்கி, உன்
நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும்
உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும்
நாட்டிற்குச் செல்.

2 உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன். உன்
பெயரை நான் சிறப்புறச் செய்வேன்; நீயே ஆசியாக விளங்குவாய்.

3 உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன்; உன்னைச்
சபிப்போரை நானும் சபிப்பேன்; உன் வழியாக மண்ணுலகின்
மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும் என்றார்.

4 ஆண்டவர் ஆபிராமுக்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார்.
அவருடன் லோத்தும் சென்றார். ஆபிராம் ஆரானைவிட்டுச்
சென்றபொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து.

5 ஆபிராம் தம் மனைவி சாராயையும் தம் சகோதரனின் மகன்
லோத்தையும் உடனழைத்துச் சென்றார். அவர்கள் ஆரானில்
சேர்த்திருந்த செல்வத்துடனும், வைத்திருந்த ஆள்களுடனும் கானான்
நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று அந்நாட்டைச் சென்றடைந்தனர்.

6 ஆபிரகாம் அந்நாட்டில் நுழைந்து செக்கேமில் இருந்த மோரேயின்
கருவாலி மரத்தை அடைந்தார். அப்பொழுது கானானியர் அந்நாட்டில்
வாழ்ந்து வந்தனர்.

7 ஆண்டவர் ஆபிராமுக்குத் தோன்றி, உன் வழிமரபினர்க்கு
இந்நாட்டைக் கொடுப்பேன் என்றார். ஆகவே, தமக்குத் தோன்றிய
ஆண்டவருக்கு அங்கே அவர் ஒரு பலிபீடத்தை எழுப்பினார்.

8 ஆபிராம் அங்கிருந்து புறப்பட்டு, பெத்தேலுக்குக் கிழக்கே இருந்த
மலைப்பக்கம் சென்று பெத்தேலுக்கு மேற்கே ஆயிக்குக் கிழக்கே
கூடாரம் அமைத்துக் குடியிருந்தார். அங்கே ஆண்டவருக்கு அவர் ஒரு
பலிபீடத்தை எழுப்பி ஆண்டவரது திருப்பெயரைத் தொழுதார்.

9 இவ்வாறு, ஆபிராம் படிப்படியாக நெகேபு நோக்கிப் பயணம்
செய்தார்.எகிப்தில் ஆபிராம்.

10 அப்பொழுது அந்நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சம் கடுமையாக
இருந்ததால், ஆபிராம் தாம் தங்கி வாழ்வதற்கு எகிப்து நாட்டிற்குச்
சென்றார்.

11 அவர் எகிப்தை நெருங்கிய பொழுது தம் மனைவி சாராயிடம், நீ
கண்ணுக்கு அழகானவள் என்பது எனக்குத் தெரியும்.

12 எகிப்தியர் உன்னைக் காணும்பொழுது இவள் அவனுடைய மனைவி
எனச்சொல்லி என்னைக் கொன்று விடுவர்; உன்னையோ உயிரோடு



விட்டுவிடுவர்.

13 உன் பொருட்டு எனக்கு நல்லது நடக்கவும் உன்னால் என் உயிர் காப்பாற்றப்படவும் நீ என் சகோதரி எனச் சொல்லி விடு என்றார்.

14 ஆபிராம் எகிப்தைச் சென்றடைந்தபொழுது, சாராய் மிகவும் அழகானவராக இருப்பதை எகிப்தியர் கண்டனர்.

15 பார்வோனின் மேலதிகாரிகள் அவரைக் கண்டு அவரைப்பற்றிப் புகழ்ந்தனர். ஆகவே, அவர் பார்வோனின் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

16 அவர் பொருட்டு ஆபிராமுக்குப் பார்வோன் நன்மை செய்தான்; ஆடு மாடுகளையும் கழுதைகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், பெண் கழுதைகளையும் ஒட்டகங்களையும் அவருக்குக் கொடுத்தான்.

17 ஆனால், ஆண்டவர் ஆபிராமின் மனைவி சாராய்க்கு நேரிட்டதை முன்னிட்டுப் பார்வோனையும் அவன் குடும்பத்தாரையும் கொடிய கொள்ளை நோய்களால் துன்பப்படுத்தினார்.

18 பார்வோன் ஆபிராமை அழைத்து அவரிடம், நீ எனக்கு இப்படிச் செய்து விட்டாயே! அவள் உன் மனைவி என்று ஏன் என்னிடம் சொல்லவில்லை?

19 அவள் உன் சகோதரி என்று நீ ஏன் சொன்னாய்? அதனால்தான் நான் அவளை என் மனைவியாக எடுத்துக் கொண்டேன்! இப்பொழுதே, உன் மனைவியைக் கூட்டிக்கொண்டு புறப்படு என்றான்.

20 பின் பார்வோன் தன் ஆள்களுக்குக் கட்டளையிட அவர்கள் அவரை அவர் மனைவியுடனும் அவருக்குரிய எல்லாவற்றுடனும் அனுப்பிவிட்டனர்.

## தொடக்கநூல் அதிகாரம் – 13 – திருவிவிலியம்

### ஆபிராம், லோத்து பிரிதல்


1 ஆகவே, ஆபிராம் தம் மனைவியுடனும் தமக்குரிய எல்லாவற்றுடனும் எகிப்திலிருந்து நெகேபை நோக்கிச் சென்றார். அவருடன் லோத்தும் சென்றார்.

2 அப்பொழுது ஆபிராம் கால்நடைகளும் வெள்ளியும் தங்கமும் கொண்ட பெரிய செல்வராக இருந்தார்.

3 நெகேபிலிருந்து பெத்தேல் வரை படிப்படியாகப் பயணம் செய்து பெத்தெலுக்கும் ஆயிக்கும் இடையே முதலில் தம் கூடாரம் இருந்த அதே இடத்தை அடைந்தார்.

4 தாம் முதலில் பலிபீடம் அமைத்திருந்த இடத்தை அடைந்து அங்கே அவர் ஆண்டவரது திருப்பெயரைத் தொழுதார்.

# BIBLE




5 ஆபிராமுடன் சென்ற லோத்துக்கும் ஆட்டு மந்தைகளும் மாட்டு மந்தைகளும் கூடாரங்களும் இருந்தன.

6 அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு இடம் போதவில்லை. அவர்களுக்கு மிகுதியான உடைமைகள் இருந்ததால், அவர்களால் சேர்ந்து வாழ முடியவில்லை.

7 ஆபிராமின் கால்நடைகளை மேய்ப்போருக்கும் லோத்தின் கால்நடைகளை மேய்ப்போருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அப்பொழுது கானானியரும் பெரிசியரும் அந்நாட்டில் வாழ்ந்து வந்தனர்.

8 ஆபிராம் லோத்தை நோக்கி, எனக்கும் உனக்கும் என் ஆள்களுக்கும் உன் ஆள்களுக்கும் இடையே பூசல் ஏற்படவேண்டாம். ஏனெனில், நாம் உறவினர்.

9 நாடு முழுவதும் உன் கண்முன் இருக்கின்றது அல்லவா? என்னிடமிருந்து பிரிந்து செல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நீ இடப்பக்கம் சென்றால் நான் வலப்பக்கம் செல்வேன்; நீ வலப்பக்கம் சென்றால் நான் இடப்பக்கம் செல்வேன் என்றார்.

10 லோத்து கண்களை உயர்த்தி எங்கும் நீர்வளம் சிறந்திருந்த யோர்தானின் சுற்றுப்பகுதியைக் கண்டார். சோகார் வரை அப்பகுதி ஆண்டவரது தோட்டம் போலும் எகிப்து நாட்டைப் போலும் இருந்தது. சோதோம், கொமோராவை ஆண்டவர் அழிப்பதற்கு முன் அது அவ்வாறிருந்தது.

11 லோத்து யோர்தான் சுற்றுப்பகுதி முழுவதையும் தேர்ந்துகொண்டு கிழக்குப் பக்கமாகப் பயணமானார். இவ்வாறு ஒருவர் ஒருவரிடம் பிரிந்தனர்.

12 ஆபிராம் கானான் நாட்டில் வாழ்ந்து வந்தார். லோத்து யோர்தான் சுற்றுப் பகுதியிலிருந்த நகரங்களில் வாழ்ந்துவந்தார். இறுதியில் சோதோமுக்கு அருகில் கூடாரம் அமைத்துக்கொண்டார்.

13 ஆனால், சோதோமின் மக்கள் ஆண்டவருக்கு எதிரான மிகக்கொடிய பாவிகளாக இருந்தனர்.

### ஆபிராம் எபிரோனில் குடியேறல்

14 லோத்து ஆபிராமிடமிருந்து பிரிந்தபின், ஆண்டவர் ஆபிராமை நோக்கி, நீ இருக்கும் இடத்திலிருந்து உன் கண்களை உயர்த்தி வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே பார்.

15 ஏனெனில், நீ காணும் இந்த நாடு முழுவதையும் உனக்கும் உன் வழிமரபினருக்கும் என்றென்றும் கொடுக்கப்போகிறேன்.

16 உன் வழிமரபினரைப் பூவுலகின் மண்ணைப் போலப் பெருகச் செய்வேன். ஆகவே, பூவுலகின் மணலை ஒருவன் எண்ண முடியுமானால், உன் வழிமரபினரையும் எண்ணலாம்.

# BIBLE




17 நீ எழுந்து, இந்நாட்டின் நெடுகிலும், குறுக்கிலும் நடந்து பார். ஏனெனில், இதை நான் உனக்குக் கொடுக்கப் போகிறேன் என்றார்.

18 ஆகவே, ஆபிராம் தம் கூடாரத்தைப் பிரித்துக் கொண்டு எபிரோனிலிருந்த மம்ரே என்ற கருவாலி மரத்தோப்பருகில் வந்து வாழ்ந்தார். அங்கே ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் எழுப்பினார்.

## தொடக்கநூல் அதிகாரம் – 14 – திருவிவிலியம்

### ஆபிராம் லோத்தை மீட்டல்

1 அம்ராபல் சினயார் அரசனாகவும் அரியோக்கு எல்லாசரின் அரசனாகவும் கெதர்லகோமர் ஏலாமின் அரசனாகவும் திதால் கோயிமின் அரசனாகவும் இருந்தபொழுது,

2 அவர்கள் சோதோம் அரசன் பெரா, கொமோரா அரசன் பிர்சா, அதிமா அரசன் சினாபு, செபோயிம் அரசன் செமேபர், பேலா அரசன் சோவார் ஆகியோருக்கு எதிராகப் போர் தொடுத்தனர்.

3 அவர்கள் அனைவரும் இப்பொழுது உப்புக்கடலாக இருக்கும் சித்திம் பள்ளத்தாக்கில் ஒன்று திரண்டனர்.

4 பன்னிரண்டு ஆண்டுகள் அவர்கள் கெதர்லகோமருக்குப் பணிந்திருந்தனர். ஆனால், பதின்மூன்றாம் ஆண்டில் அவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர்.

5 ஆனால், பதினான்காம் ஆண்டில் கெதர்லகோமரும் அவனுடன் இருந்த அரசர்களும் வந்து அஸ்தரோத்து கர்னயிமிலிருந்த இரபாயியரையும், காமிலிருந்த சூசியரையும், சாவே கிரியாத்தயிமிலிருந்த ஏமியரையும்

6 சேயிர் மலைப்பகுதியில் இருந்த ஓரியரையும் பாலை நிலத்தின் எல்லையில் இருந்த ஏல்பாரான்வரை துரத்திச் சென்று முறியடித்தனர்.


7 அவர்கள் திரும்பும் வழியில் காதேசு என்ற ஏன் மிட்சுபாற்றுக்கு வந்து அமலேக்கியரின் நாடு முழுவதையும் அச்சோன் தாமாரில் வாழ்ந்த எமோரியரையும் அழித்தனர்.

8 அப்பொழுது சோதோம் அரசனும் கொமோரா அரசனும் அதிமா அரசனும் செபோயிம் அரசனும் பேலா அரசன் சோவாரும் சென்று,

9 ஏலாம் அரசன் கெதர்லகோமருடனும் கோயிம் அரசன் திதாலுடனும் சினயார் அரசன் அம்ராபலுடனும் எல்லாசர் அரசன் அரியோக்குடனும்– ஆக, நான்கு அரசர்கள் ஐந்து அரசர்களுக்கு எதிராக சித்திம் பள்ளத்தாக்கில் போர்தொடுத்தனர்.

10 இந்தச் சித்திம் பள்ளத்தாக்கில் கீல் குழிகள் மிகப்பல இருந்தன. சோதோம் அரசனும் கொமோரா அரசனும் தப்பி ஓடியபொழுது

# BIBLE




அவற்றினுள் விழுந்தனர். மற்றவர்கள் தப்பிப் பிழைப்பதற்கு மலையை நோக்கி ஓடினர்.

11 வெற்றி பெற்றவர்கள் சோதோம், கொமோராவில் இருந்த செல்வங்கள், உணவுப் பண்டங்கள் அனைத்தையும் கவர்ந்து கொண்டு அங்கிருந்து வெளியேறினர்.

12 அவர்கள் சோதோமில் வாழ்ந்த ஆபிராமின் சகோதரன் மகனான லோத்தையும் அவர் செல்வங்களையும் கவர்ந்து கொண்டு சென்றனர்.

13 தப்பிவந்த ஒருவன் எபிரேயரான ஆபிராமிடம் இச்செய்தியை அறிவித்தான். அப்பொழுது ஆபிராம் எசுக்கோல், ஆனேர் ஆகியோரின் சகோதரனான மம்ரே என்ற எமோரியனின் கருவாலி மரத்தோப்பில் வாழ்ந்து வந்தார். அவர்கள் ஆபிராமுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்கள்.

14 தம் உறவினர் கைதியாகக் கொண்டு செல்லப்பட்டார் என்பதைக் கேள்வியுற்றதும், ஆபிராம் தம் வீட்டில் பிறந்து வளர்ந்து பயிற்சி பெற்ற முந்நூற்றுப் பதினெட்டுப் பேரைத் திரட்டிக் கொண்டு தாண்வரை அவர்களைத் துரத்திச் சென்றார்.

15 அவரும் அவர் ஆள்களும் அணிஅணியாகப் பிரிந்து இரவில் அவர்களைத் தாக்கித் தோற்கடித்தனர். தமஸ்குக்கு வடக்கே இருக்கும் ஓபாவரை அவர்களைத் துரத்திச் சென்றனர்.

16 அவர் எல்லாச் செல்வங்களையும் மீட்டுக் கொண்டு வந்தார். தம் உறவினரான லோத்தையும் அவர் செல்வங்களையும் பெண்களையும் ஆள்களையும் மீட்டுக் கொண்டு வந்தார்.

## ஆபிராமுக்கு மெல்கிசெதேக்கின் ஆசி

17 ஆபிராம் கெதர்லகோமரையும் அவனுடன் இருந்த அரசர்களையும் முறியடித்துத் திரும்பியபொழுது அரசர் பள்ளத்தாக்கு என்ற சாவே பள்ளத்தாக்கில் அவரைச் சந்திக்கச் சோதோம் அரசன் வந்தான்.


18 அப்பொழுது சாலேம் அரசர் மெல்கிசெதேக்கு அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்தார். அவர் உன்னத கடவுளின் அர்ச்சகராக இருந்தார்.

19 அவர் ஆபிராமை வாழ்த்தி, விண்ணுலகையும் மண்ணுலகையும் தோற்றுவித்த உன்னத கடவுள் ஆபிராமிற்கு ஆசி வழங்குவாராக!

20 உன் எதிரிகளை உன்னிடம் ஒப்புவித்த உன்னத கடவுள் போற்றி! போற்றி! என்றார். அப்பொழுது ஆபிராம் எல்லாவற்றிலிருந்தும் அவருக்குப் பத்தில் ஒரு பங்கைக் கொடுத்தார்.

21 சோதோம் அரசன் ஆபிராமிடம், ஆள்களை என்னிடம் ஒப்படைத்துவிடும். ஆனால், செல்வங்களை நீரே வைத்துக் கொள்ளும்

# BIBLE




என்றான்.

22 அதற்கு ஆபிராம் சோதோம் அரசனிடம், விண்ணுலகையும் மண்ணுலகையும் தோற்றுவித்த உன்னத கடவுளாகிய ஆண்டவருக்கு ஆணையிட்டுக் கூறுகிறேன்;


23 நான்தான் ஆபிராமைச் செல்வன் ஆக்கினேன் என்று நீர் சொல்லாதபடி, உமக்குரிய அனைத்திலிருந்தும் ஒரு நூல் துண்டையோ, காலணி வாரையோ, நான் எடுத்துக் கொள்ளமாட்டேன்.

24 இளைஞர்கள் உண்டதைத் தவிர எனக்கு எதுவும் வேண்டாம். ஆனால், என்னுடன் வந்த ஆனேர், சுக்கோல், மம்ரே ஆகியோர் அவர்கள் பங்கை எடுத்துக் கொள்ளட்டும் என்றார்.

தொடரும்.....




# KURAN மெகா தொடர் PART - 6




விற்றுப்பெற்றுக்கொண்டது கெட்டதாகும். இதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?

Play CopyWordByWord2:103

2:103 يَعْلَمُوْنَ لَوْ كَانُوْا ؕ وَلَوْ اَنَّهُمْ اٰمَنُوْا وَاتَّقَوْا لَمَثُوْبَةٌ مِّنْ عِنْدِ اللّٰهِ خَيْرٌ

2:103. அவர்கள் நம்பிக்கை கொண்டு தங்களை காப்பாற்றிக் கொண்டால், அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் நற்கூலி மிகவும் மேலானதாக இருக்கும்; இதனை அவர்கள் அறிய வேண்டாமா?

Play CopyWordByWord2:104


2:104 وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ اَلِيْمٌ نَا وَ قُوْلُوا انْظُرْنَا وَاسْمَعُوْا يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَقُوْلُوْا رَاعِ

2:104. ஈமான் கொண்டோரே! நீங்கள் (நம் ரஸூலைப் பார்த்து இரண்டு அர்த்தம் கொடுக்கும் சொல்லாகிய) “ராயினா” என்று சொல்லாதீர்கள். (இதற்குப் பதிலாக அன்புடன் நோக்குவீர்களாக என்னும் பொருளைத் தரும் சொல்லாகிய) “உன்ளுர்னா” என்று கூறுங்கள். இன்னும், அவர் சொல்வதைக் கேளுங்கள். மேலும் காஃபிர்களுக்குத் துன்பம் தரும் வேதனையும் உண்டு.

Play CopyWordByWord2:105

2:105 يُّنَزَّلَ عَلَيْكُمْ مِّنْ خَيْرٍ مِّنْ رَّبِّكُمْ مَا يَوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ وَلَا الْمُشْرِكِيْنَ اَنْ
ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ وَاللّٰهُ يَخْتَصُّ بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ

2:105. அஹ்லுல் கிதாப்(வேதத்தையுடையவர்களில்) நிராகரிப்போரோ, இன்னும் முஷ்ரிக்குகளோ உங்கள் இறைவனிடமிருந்து, உங்கள் மீது நன்மை இறக்கப்படுவதை விரும்பவில்லை; ஆனால் அல்லாஹ் தன் அருட்கொடைக்கு உரியவர்களாக யாரை நாடுகிறானோ அவரையே தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்; அல்லாஹ் மிகப் பெரும் கிருபையாளன்.



Play CopyWordByWord2:106
2:106 اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ مِّنْهَآ اَوْ مِثْلِهَا مَا نَنْسَخْ مِنْ اٰيَةٍ اَوْ نُنْسِهَا نَاْتِ بِخَيْرٍ
قَدِيْرٌ

2:106. ஏதேனும் ஒரு வசனத்தை நாம் மாற்றினால் அல்லது அதனை மறக்கச் செய்தால் அதைவிட சிறந்ததையோ அல்லது அது போன்றதையோ நாம் கொண்டுவருவோம். நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப்பொருட்களின் மீதும் சக்தியுள்ளவன் என்பதை நீர் அறியவில்லையா?

Play CopyWordByWord2:107
2:107 وَمَا لَـكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ مِنْ وَّلِىٍّ وَّلَا نَصِيْرٍ اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ


2:107. நிச்சயமாக வானங்கள் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அல்லாஹ்வையன்றி உங்களுக்கு பாதுகாவலனோ, உதவி செய்பவனோ இல்லை என்பதை நீர் அறியவில்லையா?

Play CopyWordByWord2:108
2:108 يَّتَبَدَّلِ الْكُفْرَ بِالْاِيْمَانِ وَمَنْ اَمْ تُرِيْدُوْنَ اَنْ تَسْــَٔلُوْا رَسُوْلَـكُمْ كَمَا سُٮِٕلَ مُوْسٰى مِنْ قَبْلُ
فَقَدْ ضَلَّ سَوَآءَ السَّبِيْلِ

2:108. இதற்கு முன்னர் மூஸாவிடம் கேள்விகள் கேட்கப்பட்ட மாதிரி நீங்களும் உங்கள் ரஸூலிடம் கேட்க விரும்புகிறீர்களா? எவனொருவன் ஈமானை "கு.ஃப்ரினால்" மாற்றுகிறானோ அவன் நிச்சயமாக நேர் வழியினின்றும் தவறிவிட்டான்.

Play CopyWordByWord2:109
2:109 فُسِهِمْ وَدَّ كَثِيْرٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ لَوْ يَرُدُّوْنَكُمْ مِّنْۢ بَعْدِ اِيْمَانِكُمْ كُفَّارًا ۖۚ حَسَدًا مِّنْ عِنْدِ اَنْ
اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ حَتّٰى يَاْتِىَ اللّٰهُ بِاَمْرِهٖ ۗ فَاعْفُوْا وَاصْفَحُوْا مِّنْۢ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُمُ الْحَقُّ
قَدِيْرٌ

2:109. வேதத்தை உடையவர்களில் பெரும்பாலோர் உண்மை அவர்களுக்கு தெளிவாகத்தெரிந்த



பின்னரும் தங்கள் மனதில் உள்ள பொறாமையினால் நீங்கள் நம்பிக்கை கொண்டபின் கா∴பிர்களாக மாற வேண்டுமென விரும்புகிறார்கள். ஆனால் அல்லாஹ்வின் கட்டளை வரும்வரை அவர்களை மன்னித்து, அவர்கள் போக்கிலே விட்டுவிடுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப் பொருட்கள் மீதும் சக்தி உடையவனாக இருக்கிறான்.

Play CopyWordByWord2:110

إِنَّ اللّٰهَ وَمَا تُقَدِّمُوْا لِاَنْفُسِكُمْ مِّنْ خَيْرٍ تَجِدُوْهُ عِنْدَ اللّٰهِ ۗ وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ 2:110
بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

2:110. இன்னும் தொழுகையை முறையாகக் கடைப்பிடித்தும்; ஜகாத் கொடுத்தும் வாருங்கள்; ஏனெனில் உங்களுக்காக எந்த நன்மையை முன்னமேயே அனுப்பி வைக்கின்றீர்களோ, அதை அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் உற்று நோக்கியவனாகவே இருக்கிறான்.


Play CopyWordByWord2:111

قُلْ هَاتُوْا بُرْهَانَكُمْ اِنْ تِلْكَ اَمَانِيُّهُمْ وَقَالُوْا لَنْ يَّدْخُلَ الْجَـنَّةَ اِلَّا مَنْ كَانَ هُوْدًا اَوْ نَصٰرٰى 2:111
كُنْتُمْ صٰدِقِيْنَ

2:111. “யூதர்கள், கிறிஸ்தவர்களைத் தவிர வேறு யாரும் சுவனபதியில் நுழையவே மாட்டார்கள்” என்று அவர்கள் கூறுகிறார்கள்; இது அவர்களின் வீணாசையேயாகும்; “நீங்கள் உண்மையுடையோராக இருந்தால் உங்களுடைய சான்றை சமர்ப்பியுங்கள்” என்று (நபியே!) நீர் கூறுவீராக!

Play CopyWordByWord2:112

بَلٰى مَنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهٗۤ اَجْرُهٗ عِنْدَ رَبِّهٖ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ 2:112
يَحْزَنُوْنَ□



2:112. அப்படியல்ல! எவனொருவன் தன்னை அல்லாஹ்வுக்கே (முழுமையாக) அர்ப்பணம் செய்து, இன்னும் நற்கருமங்களைச் செய்கிறானோ, அவனுடைய நற்கூலி அவனுடைய இறைவனிடம் உண்டு. இத்தகையோருக்கு அச்சமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

Play CopyWordByWord2:113


وَقَالَتِ الْيَهُوْدُ لَيْسَتِ النَّصٰرٰى عَلٰى شَىْءٍ وَّقَالَتِ النَّصٰرٰى لَيْسَتِ الْيَهُوْدُ عَلٰى شَىْءٍ ۙ وَّهُمْ يَتْلُوْنَ الْكِتٰبَ‌ؕ كَذٰلِكَ قَالَ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ مِثْلَ قَوْلِهِمْ‌ۚ فَاللّٰهُ يَحْكُمُ بَيْنَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ فِيْمَا كَانُوْا فِيْهِ يَخْتَلِفُوْنَ 2:113

2:113. யூதர்கள் கூறுகிறார்கள்: "கிறிஸ்தவர்கள் எந்த நல்வழியிலும் இல்லை" என்று; கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள்: "யூதர்கள் எந்த நல்வழியிலும் இல்லை" என்று; ஆனால், இவர்கள் (தங்களுக்குரிய) வேதத்தை ஓதிக்கொண்டே (இப்படிக் கூறுகிறார்கள்); இவர்கள் கூறும் சொற்களைப் போலவே ஒன்றும் அறியாதவர்களும் கூறுகிறார்கள்; இறுதித்தீர்ப்பு நாளில் அல்லாஹ் இவர்கள் தர்க்கித்து மாறுபட்டுக் கொண்டிருக்கும் விஷயத்தில் தீர்ப்பளிப்பான்.

Play CopyWordByWord2:114

وَمَنْ اَظْلَمُ مِمَّنْ مَّنَعَ مَسٰجِدَ اللّٰهِ اَنْ يُّذْكَرَ فِيْهَا اسْمُهٗ وَسَعٰى فِىْ خَرَابِهَا ‌ؕ اُولٰٓٮِٕكَ مَا كَانَ لَهُمْ اَنْ يَّدْخُلُوْهَآ اِلَّا خَآٮِٕفِيْنَ ؕ لَهُمْ فِى الدُّنْيَا خِزْىٌ وَّلَهُمْ فِى الْاٰخِرَةِ عَذَابٌ عَظِيْمٌ 2:114

2:114. இன்னும், அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுகளில் அல்லாஹ்வின் பெயரைச் சொல்லித் துதிப்பதைத் தடுத்து, இவற்றைப் பாழாக்க முயல்பவனை விட, பெரிய கொடுமைக்காரன் யார் இருக்க முடியும்? இத்தகையோர் அச்சமுடனன்றி பள்ளிவாயில்களில் நுழைவதற்கு தகுதியே இல்லாதவர்கள், இவர்களுக்கு




இவ்(வுலக) வாழ்வில் இழிவுதான்; மேலும், மறுமையில் இவர்களுக்குக் கடுமையான வேதனையும் உண்டு.

Play CopyWordByWord2:115

اِنَّ اللّٰهَ وَاسِعٌ عَلِيْمٌفَاَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ ۞وَلِلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ 2:115

2:115. கிழக்கும், மேற்கும் அல்லாஹ்வுக்கே (சொந்தம்); நீங்கள் எந்தப் பக்கம் திரும்பினாலும் அங்கே அல்லாஹ்வின் முகம் இருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் விசாலமானவன்; எல்லாம் அறிந்தவன்.

Play CopyWordByWord2:116

كُلٌّ لَّهٗ قَانِتُوْنَ بَلْ لَّهٗ مَا فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ سُبْحٰنَهٗ ۙ وَقَالُوا اتَّخَذَ اللّٰهُ وَلَدًا 2:116

2:116. இன்னும் கூறுகிறார்கள்: “அல்லாஹ் ஒரு குமாரனைப் பெற்றிருக்கிறான்” என்று. அப்படியல்ல - அவன் (இவர்கள் கூறுவதிலிருந்து) மிகத் தூய்மையானவன்; வானங்கள், பூமியில் உள்ளவை யாவும் அவனுக்கே உரியவை; இவையனைத்தும் அவனுக்கே அடிபணிந்து வழிபடுகின்றன.

Play CopyWordByWord2:117


وَ اِذَا قَضٰٓى اَمْرًا فَاِنَّمَا يَقُوْلُ لَهٗ كُنْ فَيَكُوْنُبَدِيْعُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ 2:117

2:117. (அல்லாஹ்) வானங்களையும், பூமியையும் முன் மாதிரியின்றி (இல்லாமையிலிருந்து), தானே உண்டாக்கினான்; அதனிடம் “குன்” - ஆகுக- என்று கூறினால், உடனே அது ஆகிவிடுகிறது.

Play CopyWordByWord2:118

ؕ كَذٰلِكَ قَالَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ مِّثْلَ وَقَالَ الَّذِيْنَ لَا يَعْلَمُوْنَ لَوْلَا يُكَلِّمُنَا اللّٰهُ اَوْ تَاْتِيْنَآ اٰيَةٌ 2:118
قَوْمٍ يُّوْقِنُوْنَ قَدْ بَيَّنَّا الْاٰيٰتِ لِتَشَابَهَتْ قُلُوْبُهُمْ قَوْلِهِمْ

2:118. இன்னும் அறியாதவர்கள் கூறுகிறார்கள்: “அல்லாஹ் ஏன் நம்மிடம் பேசவில்லை; மேலும், நமக்கு ஏன் அத்தாட்சி வரவில்லை?” என்று;




இவர்களுக்கு முன்னர் இருந்தவர்களும் இப்படியே - இவர்களின் சொற்களைப்போலவே - தான் கூறினார்கள். இவர்களின் இதயங்கள் அவர்களுடைய இதயங்களைப் போன்றவையே தான். ஈமானில் உறுதியுடைய மக்களுக்கு நம் அத்தாட்சிகளை (அவர்கள் மனதில் பதியும்படி) நாம் நிச்சயமாகத் தெளிவாய் விவரித்துள்ளோம்.

Play CopyWordByWord2:119

وَلَا تُسْـَٔـلُ عَنْ اَصْحٰبِ الْجَحِيْمِ ۞ اِنَّاۤ اَرْسَلْنٰكَ بِالْحَـقِّ بَشِيْرًا وَّنَذِيْرًا 2:119

2:119. (நபியே!) நாம் உம்மை உண்மையுடன், (நல்லடியாருக்கு) நன்மாராயம் கூறுபவராகவும், (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமே அனுப்பியுள்ளோம்; நரகவாதிகளைப் பற்றி நீர் வினவப்பட மாட்டீர்.

Play CopyWordByWord2:120

قُلْ اِنَّ هُدَى اللّٰهِ هُوَ الْهُدٰىؕ وَلَنْ تَرْضٰى عَنْكَ الْيَهُوْدُ وَلَا النَّصٰرٰى حَتّٰى تَتَّبِعَ مِلَّتَهُمْ 2:120
نَصِيْرٍ مَا لَكَ مِنَ اللّٰهِ مِنْ وَّلِىٍّ وَّلَا ؕ وَلَٮِٕنِ اتَّبَعْتَ اَهْوَآءَهُمْ بَعْدَ الَّذِىْ جَآءَكَ مِنَ الْعِلْمِ

2:120. (நபியே!) யூதர்களும், கிறிஸ்தவர்களும் அவர்கள் வழியை நீர் பின்பற்றாதவரையில் உம்மைப்பற்றி திருப்தியடைய மாட்டார்கள். (ஆகவே, அவர்களை நோக்கி) "நிச்சயமாக அல்லாஹ்வின் வழி-(இஸ்லாம்) அதுவே நேர்வழி" என்று சொல்லும்; அன்றி ஞானம் உம்மை வந்தடைந்த பின்னரும் அவர்களுடைய இச்சைகளைப் பின்பற்றுவீரேயானால், அல்லாஹ்விடமிருந்து உம்மைக் காப்பாற்றுபவனும், உமக்கு உதவி செய்பவனும் இல்லை.

Play CopyWordByWord2:121

தொடரும்.....




# பிச்சைக்காரர்கள் இல்லாத உலகத்தை உருவாக்கி வருகின்றேன்

**–தலைமை சமூகசேவகர் லார்ட்ஸ் ம.பால்ராஜ்**

14.7.2021 புதன் கிழமை : லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவரும் நிறுவனருமான லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் கடந்த 25 ஆண்டுகளாக பலநூறு வகையான சமூக சேவைகளை மிகவும் சிறப்பாக செய்து வருகின்றார்.

அதில் ஒரு சேவையான சாலையோர பிச்சைக்காரர்களை தனியார் அனாதை இல்லங்களில் சேர்த்து பராமரித்து வருவதும், உணவு மற்றும் குடிநீர் அளித்து வருவதும் ஆகும்.

தனியார் அனாதை இல்லங்களில் அனைத்துப் பிச்சைக்காரர்களும் தங்குவதற்கு போதுமான இடவசதி இல்லாததாலும், சாலையோரம் வசிக்கும் பிச்சைக்காரர்கள் தமிழகத்தில் நிறைய பேர் இருக்கின்றார்கள் என்று கடந்த ஊரடங்கு நாட்களின் போது கண்டறிந்து அவர்களுக்கு அனைவருக்கும் தினமும் மூன்று வேளையும் உணவும் குடிநீரும் வழங்கி வந்துள்ளார்.

இதன் பின்னணியில் கடந்த 7.7.2021 புதன் கிழமை அன்று லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் பிச்சைக்காரர்கள் இல்லாத உலகத்தை உருவாக்குவேன் என்று சபதம் ஏற்றார்.

இதன் தொடர்ச்சியாக அன்றைய தினமே சென்னையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் தலைவர் தோழர் அன்பரசு அவர்களை நேரில் சந்தித்து சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதியில் உள்ள பிச்சைக்காரர்களை தங்க வைக்க ஒரே ஒரு இடம் வேண்டும் அந்த இடம் கிடைக்குமா? என்று அவரிடம் வேண்டுகோள் விடுக்க அவரும் உடனே தருகிறேன் என்று கூறிவிட்டார்.

சாலையில் இருந்து மீட்டெடுத்து அங்கு கொண்டு செல்லும் பிச்சைக்காரர்களை நல்ல முறையில் டூத் பேஸ்ட், டூத் பிரஸ், சோப்பு, உணவு, உடை மற்றும் மருத்துவம் அனைத்தும் கொடுத்தும் மீண்டும் அவர்கள் பிச்சை எடுக்காமல் இருக்க அவர்களுக்கு கவுன்சிலிங் கொடுத்து சிறுதொழில் வழங்கி உழைப்பாளிகளாக சுதந்திரமாக அவர்களை அந்த இடத்தை விட்டு வெளியேற்றுவது என்று முடிவு எடுத்துள்ளார் லார்ட்ஸ் ம.பால்ராஜ்.

முதல் கட்டமாக சில தினங்களில் சென்னையில் பிச்சைக்காரர்கள் இல்லா மாநகரமாக மாற்றிவிட்டு பின் படிப்படியாக இந்தியா முழுவதும் அனைத்து மாநகரத்தையும் மாற்றிவிட்டு பின் உலகம் முழுவதும் அனைத்து நாடுகளிலும் உள்ள மாநகரங்களிலும் மாற்ற வேண்டும் என்று முடிவெடுத்து செயல்பட்டு வருகின்றார்




எண்ணற்ற தொடர் சமூக சேவையில் வெள்ளி விழா கண்ட LORDS CLUBS INTERNATIONAL (சர்வதேச மனித கடவுள்கள் சங்கங்கள்) சர்வதேச தலைவர் சமூக சேவகர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள்.

இருபத்தி ஐந்து ஆண்டுகாலமாக (கால் நூற்றாண்டு காலம்) தொடர்ந்து ஏழை எளியவர்களுக்கு எண்ணற்ற தொடர் சமூக சேவைகள் செய்து வரும் சமூக சேவகர் ம.பால்ராஜ் அவர்களின் தொடர் சமூக சேவைகள்.........

இவருடைய நாடு இந்தியா

இவருடைய பெயர் சமூகசேவகர் ம.பால்ராஜ்

வாழ்க்கையில் அன்பையும் நட்பையும் ஒற்றுமையையும் கடைபிடித்தால் வாழ்க்கையில் ஜெயிப்பது எளிது என்பதே இவரது கொள்கையாகும்.

மேலும் உலக மக்களிடம் ஊழலும், பிச்சைக்காரர்களும், வருமையும் இல்லா புதியதோர் உலகை படைக்க வேண்டும் என்பது இவரது லட்சியமாகும்.........

லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல்,

இந்திய அரசின் பதிவுசெய்யப்பட்ட சர்வதேச சமூக சேவை நிறுவனத்தின் நிறுவனரும் சர்வதேச சமூக சேவககர்களின் தலைவரும் ஆவார்.

மேலும் சர்வதேச லார்ட்ஸ் பிரஸ்கிளப்ஸ்களின் சர்வதேச நிருபர்களின் தலைவரும், லார்ட்ஸ் டுடே சர்வதேச மாத இதழின் தலைமை செய்தி ஆசிரியரும் ஆவார்.

சமூக சேவகர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் மற்றும் இவரது நேரடி சமூக சேவைகளில் பல பல ஆயிரக்கணக்கான மாற்றுத் திறனாளிகளுக்கும் ஏழைஎளியோருக்கும் இலவச கம்யூட்டர் தொழிற்கல்வி அளித்துள்ளார்.

பல நூற்றுக்கணக்கான புற்றுநோயாளிகளுக்கு மருத்துவ உதவியும், நிதி உதவியும், இரத்ததான உதவியும் செய்து குணமடையச் செய்து அவர்களுக்கு நீண்ட கால ஆயுள் பெற்றுத் தந்துள்ளார்.

இவர் இதுவரையில் இலட்சக்கணக்கான இரத்த தான முகாம்கள் நடத்தியுள்ளார். பல கோடிக்கணக்கான மரம் வளர்ப்புகளும் செய்துள்ளார். பல லட்சக்கணக்கான பசித்தோருக்கு உணவளித்து அன்னதானம் செய்துள்ளார. சாலையோரம் சுற்றித்திரியும் எண்ணற்ற மனநலம் சரியில்லாதவர்களை தேடிச் சென்று மருத்துவமனையில் சேர்த்து குணமடைய செய்துள்ளார்.

சாலையோர பிச்சைக் கேட்பாளர்களை தேடிச் சென்ற உணவளித்து அனாதை இல்லத்தில் சேர்த்து உண்ணும் உணவும், உடுத்த உடையும், தங்கும் இடமும் மருத்துவமும் கிடைக்கச் செய்துள்ளார்.

பல நூற்றுக் கணக்கான அனாதைக் குழந்தைகளை அனாதை ஆசிரமங்களில் சேர்த்து உண்ணும் உணவமு, உடுத்த உடையும, தங்கும் இடம், மருத்துவத்துடன், கல்வியும் கிடைக்கச் செய்துள்ளார்.

ஏழை எளியவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் வாழ்நாள் பென்ஷன், கணவனை இழந்த பெண்களுக்கு விதவைகள் வாழ்நாள் பென்ஷன், முதியோர்களுக்கும் முதியோர் வாழ்நாள் பென்ஷன் போன்றவற்றை மாநில அரசிடமிருந்து தொடர்ந்து பெற்றுக் கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்துள்ளார்.

பல ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு தொழிற்கல்வி அளித்து வேலைவாய்ப்புகள் பெற்றுக் கொடுத்துள்ளார்.

எண்ணற்றவர்களுக்கு கண் கண்ணாடி வழங்குதல், கண் அறுவை சிகிழ்ச்சை செய்தல், செயற்கை கை மற்றும் செயற்கை கால்கள் வழங்குதல் என்று பல நூற்றுகணக்கான சேவைகளை தொடர்ந்து செய்து வருகின்றார் சமூக சேவகர் ம.பால்ராஜ் அவர்கள்.

மேலும் பொது மக்களிடையே மத ஒற்றுமையையும் மனித நேயத்தையும் வளர்ப்பதற்காக இவரது லார்ட்ஸ் டுடே ஆன்மிகம் மற்றும் சமூக சேவை பத்திரிகையில் தொடர்ந்து பகவத்கீதை, பைபிள், குரான் இம்மூன்றையும் உலக ஊடக வரலாற்றில் எந்த ஊடகங்களும் செய்திடாத இவரது லார்ட்ஸ் டுடே ஊடகத்தில் மட்டும் உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக மெகா தொடராக தொடர்ந்து பல மாதங்களாக பிரசுரித்து உலக மக்களிடையே மத ஒற்றுமையையும் மனிதநேயத்தையும் சேவை உணர்வையும் தமிழ் மொழியையும் உலகம் முழுவதும் பரவச் செய்து அனைத்து மதங்களும் தமிழ் மொழியும் உலகெங்கிலும் அழியாமல் வளர்த்து வருகின்றார்.



தமிழை தாய்மொழியாக கொண்ட இவரது பெயரிலேயே கடந்த 25 ஆண்டுகாலமாக மூன்று மதங்களின் சின்னங்களையும் மத ஒற்றுமைக்காக பதித்திருப்பது மிகச் சிறப்பானதாகும்.



மேலும் இவர் இந்தியர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை மத்திய மாநில அரசுக்கும் பொதுமக்களுக்கும் ஊடகங்களின் வாயிலாக எடுத்துச் சொல்வதும் இந்தியர்களின் பொருளாதாரம் அயல்நாடுகளுக்கு செல்லவேண்டாம் என்றும் தொடர்ந்து 25 ஆண்டு காலமாக அகிம்சை வழியில் அறப்போராட்டங்கள் நடத்துவதும் மற்றும் பல எண்ணற்ற ஊழல் அரசியல் விழிப்புணர்வு விஷயங்கள் உட்பட மதுவிலக்குப் போராட்டங்கள் நடத்துவது, இந்தியர்களின் பொருளாதாரத்தை முன்னேற்றி உயர்த்த முயற்சிப்பதும், ஊழலை எதிர்த்து போராடுவது, வீர தமிழர்களின் வீர விளையாட்டு ஜல்லிக்கட்டுக்காகப் போராடுவது, பசுமாடுகள் அடிமாடுகளாக்க கூடாது என்று போராடுவது, கரும்பு விவசாயிகளுக்கு அளிக்கவேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுத்தருவதற்காக விவசாயிகளுக்காகப் போராடுவது, மேலும் இந்தியர்கள் அனைவருக்கும் இலவசக் கல்வி வேண்டியும் அகிம்சை வழியில் அறப்போராட்டம் நடத்திவருவதும் ஏழைகளும் ஏழை குழந்தைகளும் அன்றாடம் அருந்தும் ஆவின் பால் விலை ஏற்றத்தை குறைக்கவேண்டியும் பல்வேறு போராட்டங்களுக்காக நேரடியாக வீதியில் களம் இறங்கி போராடி பல போராட்டங்களில் வெற்றி கண்டுள்ளார் ம.பால்ராஜ். இவரது போராட்டங்கள் நாடு முழுவதும் எதிரொலிக்கும் இறுதியில் இவரது சாதனையே பதிலளிக்கும்.





இவருடைய குணம் எத்தனை பேருக்கு வரும் என்று தெரியவில்லை 25 ஆண்டுகாலமாக அனைத்து சமூக மக்களுக்குமான சமூக சேவை வழியில் நேர்மையுடன் பயணிக்கும் இவரை அனைத்துச் சமூகத்தில் இருந்தும் பல இளைஞர்கள் பின்பற்றி இவரை ரோல் மாடலாகவே கருதி இவர் வழியில் பல ஆண்டு காலமாக இவரைப் பல இளைஞர்கள் பின்பற்றி இவர் பின்தொடர்கின்றார்கள்.



நல்லவர்களுக்கு என்றுமே இறைவன் துணையிருப்பார் நல்ல உள்ளம் கொண்ட இவருக்கும் என்றும் இறைவன் துணையிருப்பார். இவரது சமூக சேவையைப் பாராட்டி இவருக்கு சிறந்த சாதனையாளர் விருது, சிறந்த மனிதநேயர் விருது, சிறந்த பத்திரிகையாளர் விருது, சிறந்த சமூகசேவகர் விருது மேலும் பல எண்ணற்ற விருதுகளை நீதிபதிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்தும் வழங்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



ம.பால்ராஜ் அவர்களது ஆயுளும், சேவையும் முடிவில்லாமல் இதுவரையில் தொடர்ந்து தொடர்வது போன்று மேலும் பல பல ஆண்டுகாலங்கள் மேலும் மேலும் முடிவில்லாமல் தொடரட்டும்.













Lords மபாலராஜ
Founder & International President

இந்தியாவில் உள்ள பல இலட்சக்கணக்கான பிச்சைக்காரர்களுக்கும் ஒரே ஒருவருக்கும் கூட நம் இந்திய அரசு இதுநாள் வரையில் ஆதார் கார்டு அளிக்கவில்லை, அவர்களுக்கு கொரோனா நோய் தடுப்பூசியும் போடவில்லை. தெருவில் சுற்றித் திறியும் இவர்களுக்குத்தான் முதலில் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் இந்தியர்களாகிய இவர்கள் இந்தியாவிற்குள்ளேயே அகதிகளாகப் பிச்சை எடுத்துதான் இந்திய சுதந்திரத்திற்குப் பின் 1947 முதல் 2021 இந்த நொடி வரையில் உயிர்வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களை இந்தியர்கள் கோவில்கள், சர்ச்சுகள், மசூதிகள் போன்ற கடவுள் வழிபாட்டு இடங்களிலும் கூட கடவுள்களை வழிபட உள்ளே செல்ல அனுமதிக்காமல் இன்றும் வெளியிலேயே ஒதுக்கி வைத்து இவர்கள் மீது தீண்டாமையை கடைபிடிக்கின்றார்கள். ஆகவே இவர்கள் அனைவருக்கும் முதல் முதலாக ஆதார் கார்டு எடுத்து கொடுத்து கொரோனா நோய் தடுப்பூசி செலுத்தும் முயற்சியில் முழு மூச்சுடன் இவர்கள் உயிரைக் காக்க செயல்பட்டு வருகின்றது நமது சர்வதேச மனித கடவுள்கள் சங்கங்கள்.........

# LORDS CLUBS INTERNATIONAL

Govt. Reg. No. : 1359/2013


Contact Number : 91 + 98405 59673 | 91 + 97908 55633
e-Mail : lordsclubsinternational@gmail.com
Web : www.lordsclubs.com